தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1989, மார்கழி 12 (27-12-58). சனிக்கிழமை | இதழ் 28

புலித்தேவனா, கட்டபொம்மனா?

9

'புலித்தேவன் விடுதலைப்போர் நடத்திய வீரனல்ல; வீரபாண்டியக் கட்டபொம்மனே அந்த விருதைப் பெறும் தகுதிபடைத்தவன்' என்கிறார் திரு. ம. பொ. சி.

அவ்வாறு முடிவு செய்வதற்கு அவர் காட்டும் காரணமெல்லாம், 'புலித்தேவன் ஆர்க்காட்டு நவாபு வைத்தான் எதிர்த்தான்; ஆனால் கட்டபொம்மனோ வெள்ளைக் காரர்களையே எதிர்த்தான்' என்பதுதான்.

முதன் முதலாக வியாபாரம் செய்வதற்காக இங்கு நுழைந்து, பின்பு இந்த நாட்டின் எஜமானர்களாகவே ஆகிவிட்ட வெள்ளைக் காரர்களின் செயல்கள் அனைத்தையும் அரசியல் ரீதியில் கணக்கிட்டுப் பார்த்தால், திரு. ம. பொ. சி. யின் இந்த ஒப்புக் கொள்ளமுடியாத முடிவு நமக்குத் தெரியவரும்.

ஆங்கிலேயர்கள் இங்கே முதலில் நாடு பிடிக்க வந்ததாகச் சொல்லிக்கொண்டு வரவில்லை. இங்கே மட்டுமல்ல, அவர்களது ஆளுகைக்குள் அடங்கியிருக்கும் எந்த நாட்டிலும் அவர்கள் அப்படிச் சொல்லிக்கொண்டு வந்ததில்லை முதலில்.

ஐரோப்பாவில் ஏற்பட்ட புரட்சிகரமான மாறுதல்கள் காரணமாக, அங்குள்ள ஒவ்வொரு நாடும் புது நாடுகள் காணப் போட்டி போட்டுக்கொண்டு கிளம்பின. அந்தப் பயணம் தந்த சொத்துகள்தான் இன்றைய உலகப் பெரும் புதையலான அமெரிக்காவும், ஆஸ்திரேலியா முதலியவையும்.

உலகின் மேற்குப் பகுதியில் ஏற்பட்ட போட்டிபோல நாடு காணும் போட்டியை அவர்கள் கிழக்கில் நடத்தாவிட்டாலும், வியாபாரத் துறையில் அதை நடத்திப் பார்க்காமலில்லை. காரணம், கிழக்கின் நாடுகள் அனைத்தும் அனேகமாக பழைய நாடுகளாக-முறையாக வளர்ந்த நாடுகளாகவே இருந்தன. அவ்விதம் நடைபெற்ற வியாபாரப் போட்டி ரீதியில் இங்கே வந்து நுழைந்தவர்கள் டச்சுக்காரர்களும் பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் ஆவார்கள்.

ஐரோப்பியரல்லாத மக்களை விடப் புத்திசாலிகள் தாங்கள் தாம் என்று கருதிக்கொண்டிருந்த அந்த ஐரோப்பிய நாடுகள், பின்னாளில் தங்கள் நாடு இல்லாத, தாங்கள் குடியேற்ற முறையிலும், வியாபார முறையிலும் நெருங்கியிருக்கும் அந்த நாடுகளில், அந்த நாட்டுக்கு உரிய சுதேசிகளை விட்டு விட்டு அங்குள்ள சொத்தைப் பங்கு போட்டுக்கொள்ள தங்களுக்குள் அடிதடி போட்டுக்கொண்டார்கள். அந்த முறையில் ஏற்பட்ட அடிதடியில் வெற்றிபெற்றவர்கள் அந்த நாடுகளில் குடியேற்றக்காரர்கள், வியாபாரிகள் என்ற இரண்டில் ஏதாவது ஒரு பெயரில் உலவினார்கள். அதாவது, குறிப்பிட்ட ஒரு இடத்தில் கொள்ளையடிக்க நுழைந்த இரண்டு திருடர்களும் தங்களுக்குள் முதலில் சண்டை போட்டு, அதில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களே பின்னால் அந்த வீட்டுக்குள் நுழைந்து திருடுவது என்று முடிவு செய்து கொண்டு நுழைவதுபோல, அந்த நாடுகளில் அச்சமற்று நுழைந்தார்கள்.

இந்த வகையில் மற்றவர்களை விட உலகெங்கும் ஆங்கிலேயர்க்கும் பிரெஞ்சுக்காரருக்குமே அதிகச் சண்டைகள் நடைபெற்றன. கடைசியில் பல காரணங்களால் ஆங்கிலேயர்களே வெற்றி பெற்றார்கள்.

அந்த முறையிலேயே இந்தியத் துணைக்கண்டத்திலும் ஆங்கிலேயர்கள் தடுப்பாரற்றவர்களாக-வியாபாரம் செய்யும் முழு உரிமையும் தாங்களே பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். அப்படி நுழைந்த ஆங்கிலேயர், ஆங்கில ஆட்சியின் உரிமை பெற்ற நேர் வாரிசுகள் தாங்கள் என்று கூறிக் கொள்ளவில்லை. 'கிழக்கிந்தியக் கம்பெனி' என்ற ஒன்றை அங்கேயே உருவாக்கிக் கொண்டு, அதன் ஊழியர்களாகத் தங்களை விளம்பரப் படுத்திக்கொண்டு வந்தார்கள்.

இதிலே விசேஷம் என்னவென்றால், இந்தக் கம்பெனியின் இலாபகரமான எந்தச்செயலையும் இங்கிலாந்துப் பாராளுமன்றம் தவறு என்று குறிப்பிடவில்லை. 'ஏன் இப்படி அந்த நாடுகளில் கொள்ளையடிக்கிறீர்கள்? வியாபாரத்தின் பெயரால் ஏராளமாகப் பணம் திரட்டுகிறீர்கள்?' என்றெல்லாம் விசாரணை நடத்தி அவர்களைக் கண்டிக்கவில்லை. அதற்குப் பதிலாக, அப்படி அதிகப்படியான இலாபம் தங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக மறைமுகமாகவும், நேரடியாகவும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஏராளமான உதவிகளைச் செய்து வரத் தவறவில்லை பாராளுமன்றம். எப்போதுமே இங்லீஷ்காரர்களிடத்தில் ஒரு தனிப் பண்பு உண்டு. திருடுவார்கள்; கொள்ளையடிப்பார்கள்; கொலை செய்வார்கள்; இத்தனையும் செய்துவிட்டு, அதை, ஏன் செய்தோம் என்றால்...என்று அதற்கு நீண்டதொரு காரணத்தைக் கற்பித்து வெளியிட்டு, மற்றவர்களைச் சமாதானம் செய்வார்கள். 'ஒரு நாயைக்கொல்ல வேண்டுமென்றால், முதலில் அந்த நாய்க்கு வெறிபிடித்திருக்கிறது. என்று சொல்; அதற்குப் பிறகு அதை நீ அடித்துக் கொல்வதை யாரும் தடுக்கமாட்டார்கள்' என்பது ஆங்கிலத்திலேயே உள்ள 'பொன்மொழி'களில் ஒன்று. இந்த ரீதியில், ஒரு நாட்டில் சுரண்டல் நிகழ்த்தும்போது. கௌரவமான சுரண்டலாக-பிறர் அதனைச் சுரண்டல் என்று

— 6-ம் பக்கம் —

சினிமாவும் பத்திரிகையும்

பேச்சு மேடைகளும், பத்திரிகைகளும் அனுபவிக்கும் உரிமைகளோடு சினிமாவை ஒப்பிட்டால் இது, சினிமாவிற்குப் பாரபட்சம் காட்டப்படுவதாகிறது. உரிமைகளையும், பொறுப்புகளையும் பொறுத்து, பேச்சு மேடை, பத்திரிகைகள் இவற்றைப் போலவே சினிமாவையும் கருதவேண்டியதுதான் நியாயமானதும் நேர்மையானதுமாகும்.

—ஈ. வே. கி. சம்பத், எம். பி.

கோழை

—சென்ற இதழ்த் தொடர்ச்சி—

"ஒற்றர்கள் நகர் முழுதும் தேடி விட்டனர். அவன் நகரிலும் இல்லை; போன இடமும் தெரியவில்லை" என்றான் சாணக்யன்.

"அழிந்தொழியட்டும் அந்தக் கோழை!"

வெறுப்பைக் கொட்டிவிட்டு, மறுபடியும் மதுவுக்கு அடிமையானான் சந்திரகுப்தன்.

★

தடம் தெரியாத இருள்.

ஆந்தையும் வெளிவர அஞ்சும் அந்நேரத்தில், அவன் மட்டும் அக்கோட்டைச்சுவர்மீது நெஞ்சை அழுத்தியவாறே ஏறினான். சுவரின் உச்சிக்கு வந்ததும், விழிகள் சுற்றுப்புறத்தை வட்டமிட்டன. கீழே குதித்தான். நடைபாதையைக் கடந்து பலகனி ஒன்றின்மீது ஏறிப் பல அறைகளைக் கடந்து ஓர் அறைக்குள் நுழைந்தான். கழுகுக்குத்தான் அப்படி விழி இருக்கமுடியும்! படுத்திருந்த பலரைக் கடந்து, கனகமணிக் கட்டிலண்டை சென்று குனிந்து பார்த்தான். அவள்தான் எத்துணை அமைதியாகத் தூங்குகிறாள்.

'வசந்தா!"

புரண்டுபடுத்தவளை மறுமுறையும் அழைத்தான். கண் விழித்த அவள் திடுக்கிட்டாள். காவல் பல இருந்தும் கன்னிமாடத்தில் ஓர் ஆணுருவம்! அச்சம் துளைக்கக் கேட்டாள் "யார் நீ?"

"இளவரசன் பிந்துசாரன்!"

உயிர் திரும்ப வந்தது.

"இங்கெதற்கு வந்தீர்?"

"உன்னைக் காணத்தான்!"

எழுந்து, சால்வையால் போர்த்தியவாறே சொன்னாள்: "என்னைக் காணவா.....எவருமறியாமலா....என் தந்தை கண்டால் இளவரசன் என்றும் பாரார். கொன்றிருப்பார்!"

"காதலியைக் காண விழையும் காதலனுக்கு எத்துயரும் கடுகளவே."

"முட்டாள்! உடனே நீ ஓடாவிட்டால் காவலரை அழைப்பேன். ஓடு!"

எத்துணையோ சமாதானங்கள் சொல்லியும் அவள் கேட்கவில்லை; சினந்தாள்.

"வசந்தா!"

ஆசைத் தேன் வழிந்தது.

"நாற்றம் பிடித்த நாவால் என் பெயரைச் சொல்லாதே!" ஆணவம் கொக்கரித்தது. அவன் சொற்களில் உள்ளத்தை அளவிட்டுக் காட்டமுடியாது திண்டாடினான். தனது பேரரசு முழுதும் தன்னைக் கோழை என்றும் காமுகன் என்றும் பழிதூற்றித் தாழ்த்துவதை அவன் பொருட்படுத்தவில்லை. ஆனால் வசந்தவல்லியின் காதலைத்தான் நாடினான்.

"கோழை என்று நகைக்காதே, வசந்தா! இத்துணைக் காவலையும் கடந்துவந்த என்னைக் கோழை என்காதே! துணிச்சல் இல்லாவிட்டால் இங்கே வந்திருப்பேனா?"

"துணிச்சல்! கள்ளனைப்போல் பதுங்கி வருவதற்குப் பெயர் துணிச்சல்!"

"என்னை நீ காதலிக்கவில்லையா?"

அவள் ஏளனமாய் நகைத்தாள். "உம்மை என்றும் காதலிக்கவில்லை. நான் உம்மை நஞ்சினும் கொடிதாய்க் கருதுகிறேன்!"

ஒருவரை ஒருவர் தெளிவாகக் காணும் ஒளி இல்லை. ஆனாலும் அவள் சொல்லின் வேகத்தை அவன் உணர்ந்து திடீரென அவள் கையைப் பற்றினான்; திமிறினாள்; முடியவில்லை. முதலைபோல் பற்றிய அவன், பிடியைத் தளர்த்தாமலே பேசினான். "அள்ளி வீசாதே நெருப்புக்குவியலை. எள்ளி நகையாடாதே எல்லாம் தெரிந்தவளாய். வசந்தவல்லி! சொல்லிச் சொல்லிக் களைத்துவிட்டேன். அல்லி மலராதுபோன இந்த இரவை நன்றாக நினைவில் வைத்துக்கொள். வாணாள் முழுதும் வருந்திச் சாவாய். வாடி, வதங்கி வதங்கிப் பொருமுவாய், இரவுதோறும். சிரிக்காதே! எரிக்கின்ற தழலாய் படுக்கைநோக, ஏங்கி ஏங்கித் துடிப்பாய்.

கண்ணீர்க் காவியம் தீட்டப் போகிறாய்! அந்த நாளும் வரத்தான் போகிறது. வெந்தழலை வீசுகின்ற நீ, எனை வேண்டி வெந்து வெந்து சாகத்தான் போகிறாய்! மறுத்துப் பேசும் நீ மண்டியிடத்தான் போகிறாய்! அந்த நாள் வருவது உறுதி! அப்போது உன்னை மறுக்கத்தான் போகிறேன்; அணு அணுவாய்த் துடித்து மாளத்தான் போகிறாய்!"

அவள் அப்போதும் எள்ளிநகையாடி ஏளன மொழி சிந்தினாள்." முட்டாளின் நா நீண்டது; கோழையின் வாய் அகன்றது!"

முட்டாள்! கோழை! கொடுவாளினும் கூரிய சொற்கள்! ஆனால் அவனை ஒன்றும் மிரட்டி விடவில்லை... சென்றான். அவன் மறைந்தும் அவள் தன் அருவருப்பைக் கொட்டினாள்.

வந்த வழியே திரும்பினான். காத்து நின்ற தன் புரவிமீதேறி, தட்டிவிட்டான். காற்றைக் கிழித்துக்கொண்டோடிய குதிரை காட்டுப்பாதையில் விரைந்தது. காட்டின் இருண்ட பகுதிக்குள் நுழைந்து இரண்டு நாழிகைப்பொழுது கழிந்தது. புதர்களையும் கொடிவழிகளையும் கடந்து வந்த குதிரை பண்படுத்தப்பட்ட பகுதி ஒன்றில் நுழைந்தது.

சற்றுத் தொலைவில் தனி வீடு ஒன்று தெரிந்தது. இருண்ட காட்டின் நடுவில் இருந்த அவ்வீட்டில் அகல் விளக்கின் ஒளி தெரிந்தது. வீட்டின் முன் வந்ததும் குதிரையை நிறுத்திக் குதித்த பிந்துசாரன், கதவைத் தட்டினான். அவன் வரவையே எதிர் பார்த்து நின்றவள்போல இருந்த அவள் தாழை நீக்கினாள்.

"வந்து விட்டேன், சீதேவி."

"வாருங்கள். நெடுநாட்களுக்குப் பின் இன்றுதான் வருகிறீர்கள்!"

அவன் உள்ளே வந்ததும் கதவைப் பூட்டிவிட்டு விளக்கைத் தூண்டினாள்.

அவள் எழிலின் விளக்கவுரையாய்த் திகழ்ந்தாள்.

இருண்ட காட்டிலே இப்படி ஒரு ஒளிமுத்து விளைந்தது எப்படியோ? கோலமதி நிகர்த்த முகம், கொஞ்சும் விழிகள், கொடி நிகர்த்த இடை, சிலம்பில்லாமலே சித்திர நடனம் புரியும் தாள்கள், வண்டுக் கூட்டமும் ஏமாந்திடும் காந்தள் விரல்கள், வானத்துக்கறுமையினைத் தாங்கி ஒளிரும் குழற்கற்றை முதலிய அத்துணையும், அவள் ஒரு காட்டுப் பெண் என்பதை மறக்கச் செய்தன.

முறுவலித்தாள்; முல்லைச்சரம் ஒளி சிந்தியது. களிக்கும் இதழ் காட்டினாள்; காவியம் பிறந்தது.

அவளுக்கும் அவனுக்கும் என்ன தொடர்போ?

"அப்பா உங்களைப் பார்க்க விரும்புவார்!"

அவன் தலையாட்டியவாறே, அடுத்த அறைக்குள் நுழைந்தான். குதிரை தள்ளிய நுரைபோல் நரைத்துக் கிடந்த தலைமயிரை உடைய அக்கிழவர், படுக்கையிலிருந்து எழ முயன்றும், உடல்நோய் அவரை விடவில்லை. என்றாலும் இளவரசனை வரவேற்றார்.

"வாப்பா வா! பல நாட்களாயிற்றே, நீ வந்து போய்."

"மன்னிக்கவேண்டும். தட்சசீலத்திற்குச் சென்றிருந்தேன். நேற்று இரவுதான் வந்தேன். அது கிடக்கட்டும். உடல்நிலை எப்படி!"

கையை வைத்துத் தொட்டுப் பார்த்தான்

"ஒன்றுமில்லை...பிந்துசாரா...!"

கிழவரின் விழிகளில் இரண்டொரு துளிகள் ஊறின.

"அரசர் எப்படியிருக்கிறார்?"

"எப்படி இருந்தால் என்ன? அவர் என்னைக் காண விழைவதில்லை. களம்பல கண்ட அந்த மறவரின் தழல்விழிகள், கோழை ஒருவனைக் காணக் கூசுகிறதாம். ஏசுகிறார். எனக்கும் அந்த வஞ்சகநரியின் முகத்தைக் காணப் பிடிப்பதில்லை. நான் கோழையாம்..."

வெறுப்பு, தெறித்தது. கிழவர் நம்பிக்கையுடன் சொன்னார்: "என்றாகிலும் ஒருநாள் உன்னை உணரத்தான் போகின்றனர்... சாணக்யன் எப்படியிருக்கிறான்?"

'இரண்டும் ஒரே இடத்தில் முளைத்த கள்ளிகள்."

"ஏதும் சேதி உண்டா?"

"நகரில் போட்டிகள் நடந்தனவாம். அரசன் விருப்பு ஏதுமற்று, ஆத்திரத்துடன் கவனித்தானும். போட்டிகளில் பிரபவதத்தனும் வசகுப்தனும் முன்னணியில் நிற்கின்றனராம்!"

"அரசர் இருவரையும் பாராட்டுவார்!"

'அது என்னவோ...? நாளைக் காலையில் நானும் போட்டியில் கலந்துகொள்கிறேன். அதைச் சொல்லி உங்கள் வாழ்த்துக்களைப் பெறத்தான் வந்தேன்!"

"போட்டியில்..."

'ஆமாம்! எனை வாழ்த்துங்கள். நீங்கள்தான் எனக்குத் தந்தை-குரு-தாய் எல்லாரிலும் மேலானவர். பழுத்த வயதினரான உங்கள் வாழ்த்துக்கள்தான், என்னை வாழ்விப்பன!"

"வாழ்த்துகிறேன். வாழ்க! வாழ்க! நீ போட்டிக்கு ஆயத்தமாகிவிட்டாயா?"

"அது எப்படியோ? ஆயுதம் ஏந்தத்தான் போகிறேன் நாளை.."

ஏதோ நடந்திருக்கிறது என்பது மட்டும் கிழவருக்குப் பட்டது. ஆனால் ஏதென்று கேட்கவில்லை. காலம் அதைச் சொல்லாமலா போகும்?

"காமுகன், கூத்திக்கள்ளன், வெறியன், வேசிதாசன் என்றெல்லாம் பேசுகின்றனர். வாளேந்தத் தெரியாக் கோழை; பெண்டிர் தாளேந்தித் திரிகிறான்! வெற்றிக்கொடி நாட்டத் திறனில்லை; மின்னல் கொடியே! கன்னல்மொழியே! எனக் கவி பாட மட்டும் முடியும் இந்தக் கோழைக்கு. இருளைக் கண்டாலும் அஞ்சி ஓடுகிறான், வீரமென்பது சிறிதுமற்று. கோழை! கோழை! கோழை! கூசாமல் மொழிகின்றனர் இப்படி, எல்லாம் தெரிந்தவர்போல். கோழை என்று பழித்த பாலை மதியினர்க்குப் பாடலியின் இளவரசன் அல்ல—உங்கள் மாணவன் - பாடம் கற்றுத் தரப்போகிறான்! பார்க்கத்தான் போகிறீர்கள், நீங்களும்!

உங்கள் வாழ்த்து ஒன்றே எனக்குக் கோடிப்படைக் கருவிகள்! அவைபோதும்!"

பெரியவரிடம் பேசி முடித்ததும், வெளி வந்து சீதேவி தந்த உணவை உண்டான். இருவரும் அப்படியே வெளியே நடந்தனர். மறைந்து கிடந்த வெண்ணிலா ஒளி சிந்தத் தொடங்கியது. அவளும் அவனும் நெருங்கி நடந்தனர். இளங்காற்று உடலைத் தழுவிச் சென்றது.

குளக்கரையில் அமர்ந்தனர். அவள் கை கலைந்து கிடந்த அவன் முடியைத் தள்ளிவிட்டது. சலனம் ஏதுமற்று அவன் வாய் திறந்தான்.

"வசந்தவல்லியைக் கண்டேன்!"

அவள் அவனை ஏதோ ஓர் உணர்ச்சியுடன் பார்த்தாள்.

"என்னை ஏளனமாகப் பேசினாள். ஆசைகளைத் தூள் தூளாக்கிவிட்டாள். ஆணவத்தோடும் பேசினாள். அவளுக்குப் பாடங் கற்பிக்கவே நான் போட்டியில் கலந்துகொள்கிறேன்." நடந்ததை யெல்லாம் சொன்னான்.

"பிரபவதத்தன் இந்த வாய்ப்பை வைத்து உம்மைக் கொன்றுவிட்டால்...?" நடுங்கியது அவள் குரல்.

"கவலையில்லை. அவளுக்குப்பாடங் கற்பிக்க வேண்டும். நீ மட்டும் திடலில் இருந்தால் போதும்"

"நான் இருந்தால்...?"

"கோடி பலம் என்னுள் எழும், உன் பார்வை ஒன்றாலேயே!"

"கட்டாயம் வருகிறேன்"

"தேவி! என்னை நானே முட்டாளாக்கிக் கொள்கிறேனா?"

அவள் பதில் ஏதும் சொல்லவில்லை. ஆனால் அவள் உள்ளம் ஆசைக் கனவுகளில் மிதந்தது. அவன்மீது கொள்ளை ஆசை. அதை எப்படிச் சொல்லமுடியும்? அவன் இளவரசன். எவ்வளவுதான் இருந்தாலும் அவள் எளிய ஒரு காட்டுப் பெண். தன் ஆசையைத் தன்னுள்ளேயே அடக்கிக் கிடந்தாள்.

அவள் பழைய நிகழ்ச்சிகளை நினைத்தாள். அன்றொரு நாள்... அவன் தன் ஆட்களோடு வேட்டைக்கு வந்திருந்தான். காட்டுப் பன்றி ஒன்றை அவன் விரட்டினான். ஓடிய அது திடீரென்று திருப்பித்

— 7-ம் பக்கம் —

வருந்துகிறோம்

அண்ணா அவர்களின் தமக்கையார் மகளும், திரு. பரிமளத்தின் தாயாருமான திருமதி **சௌந்தரம் அம்மையார்** அவர்களின் மறைவு கேட்டு வருந்துகிறோம். அன்னாரின் குடும்பத்தார்க்கு எம் ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 5 | 27—12—58 | இதழ் 28

பறிக்காதே உரிமையை! பகைக்காதே பாட்டாளியை!

கந்தையுடுத்தி, கஞ்சி கிடைத்தால் குடித்து, காற்றிலும் மழையிலும் ஒரே இடத்தில் கிடந்து மனிதப்புழுக்களாய், தொழிலாளர் கிடந்த காலம் ஒன்று உண்டு.

மணிமாடங்களையும் மலர்ச்சோலைகளையும் உருவாக்கி, அதிலே உலாவும் சீமானின் சிங்கார வாழ்விற்கு ஒளியேற்றினர் அப்பஞ்சையர். ஆனால் அன்னார் வாழ்வு புழுவினும் இழிந்து; புயலிலும் வறுமைப் பிணியிலும் அழிந்து, கழிந்தது. உல்லாசங்களுக்கு உயிர்தந்த தம் வாழ்வு கொத்தப்படுவதைப் பற்றி வாய் திறக்கவும் அஞ்சினர்.

கொடுமை இப்படிக் கொத்திக் கிழிப்பது எத்துணை நாட்களுக்குத்தான் நடக்கும்? குமுறிய எரிமலை வெடித்தது; தூங்கிய புலி பாய்ந்தது. ஆணவக் கொழுப்படைக்கப் பெற்றோர் விழிகள் கிழிந்தன; அவை கண்ட கனவுகள் சிதைந்தன! புரட்சிப்படை கிளம்பியதின்–உரிமை முழக்கம் ஒலித்ததின் பயன் இது.

எங்கெங்கோ இருந்த கோடி கோடிச் சீமான்களெல்லாம் குலைநடுங்கித் துடித்து, திருந்தியுள்ளனர். என்றாலும் இங்கே மட்டும் ஒரு சீமான் கொக்கரிக்கிறார். தொழிலாளரின் எலும்பை முறித்து ஆசனம் செய்து கொலுவீற்றிருக்கிறார்; உழைப்போர் குருதியைக் குடித்துக் கும்மாளமடிக்கிறார். பாட்டாளிகளின் மண்டையோடுகளைக் கோத்து மாலை போட்டுக்கொண்டு பவனி வருகிறார்.

எண்ணங்கள் இப்படித்தான் வளர்கின்றன, தஞ்சை "சாமி மோட்டார் டிரான்ஸ்போர்ட்" நிர்வாகத்தை நோக்குகையில். ஆண்டு பலவாக உழைத்து உருவழிந்த தொழிலாளர் படை கடந்த திங்களிலிருந்து உரிமை முழங்கி அணிவகுத்துள்ளது நாள்தோறும் பல்லாயிரம் ரூபாய்களை ஈட்டித் தருகின்ற தொழிலாளர், தம் நலனுக்கான சிலவற்றைத்தான் கோரியிருக்கின்றனர்.

"அடிப்படைச் சம்பளத்தை உறுதிப்படுத்துதல்–சம்பளத்தோடு கூடிய விடுமுறை தருதல்–யூனிபாரம் கொடுத்தல் – அவற்றைச் செம்மையாய் வைத்துக்கொள்ள ஆகும் செலவும் அளித்தல்–செருப்பு வழங்குதல்" இன்ன பிற தொழிலாளரின் முக்கியக் கோரிக்கைகள். லாபத்திலும் பங்கு கோரும் அளவு தொழிலாளரின் உரிமைகள் வற்புறுத்தப்படுகின்ற இந்நாளில் இவை எளிய சில கோரிக்கைகள் தாம் ஆனால் இவற்றைத் தரவும் மறுத்ததோடு, அடக்குமுறையை – கொடுங்கோன்மையைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றனர், நிர்வாகத்தார். எதிர்ப்பைத் தெரிவிக்கும் தொழிலாளர்கள் பஸ் நிலையத்தின்முன் மறியலைத் தொடங்கினர். அது படிப்படியாக, மாவட்டத் தண்டல் நாயகம் அலுவலகத்தின் முன்னும், வேறுபல இடங்களிலும் பரவியுள்ளது. தொழிலாளரின் உரிமைப்போரை மதிக்கின்ற–அதற்கு அனுதாபம் காட்டுகின்ற வகையில் தஞ்சை நகரக் கடைகளெல்லாம் ஒருநாள் மூடப்பட்டன. இன்றும் பொதுமக்கள் மறியல் நடக்குமிடங்களில் திரண்டு நின்று தம் ஆதரவை வாழ்த்தொலிகள்மூலம் தெரிவிக்கின்றனர். மறியலை அமைதியோடு நடத்திவருகின்றனர். அனைத்து எதிர் இயக்கங்களையும் சேர்ந்த தோழர்கள் மறியலில் கடமை–கண்ணியம் – கட்டுப்பாடு வழுவாது போரிடுகின்றனர் மறியலை காங்கிரஸ் தவிர மற்ற எதிர்க்கட்சிகள் அனைத்தின் ஆதரவும் பெற்ற போராக்கியுள்ளனர்.

மறியலில் ஒரு புதிய கட்டமாய், கொரடாச்சேரி, திருவாரூர், திருவையாறு, மாயவரம், முதலிய இடங்களிலும் தொண்டர் பலர் பஸ்களின் முன் படுத்து தம் கண்டனத்தைத் தெரிவிக்கின்றனர். மறியலுக்கு ஆதரவாய், பொதுமக்களும் அந்நிர்வாகத்தினரின் பஸ்களில் ஏறுதிருக்கிறராம். இதுவரை, தஞ்சைத் தோழர்கள் பெத்தண்ணன், மாயூரநாதன் உட்பட 145 பேர் சிறை புகுந்துள்ளனர். தம் ஆதரவைக் காட்டிய பொதுமக்கள் தடியடியும் பட்டனராம்.

அடக்குமுறையை இவ்வளவு அவிழ்த்துவிட்டும், ஆசை தீரவில்லை வெறியர்கட்கு. பஞ்சையரின் உள்ளப்பங்கைப் புரிந்துகொள்ளாத பஸ் நிர்வாகத்திற்கு இறுதி எச்சரிக்கை விடுகிறோம். ஏழையருடைய உழைப்பால் உம் வாழ்க்கையை, பளபளக்கும் சாலையாக்கிக்கொண்டீர்! அன்னார் வாழ்வை வேதனைக் காடாக்கினால், ஆர்த்தெழுவோரின் போர் முழக்கம் உம்மை விட்டுவிடாது; வீழ்த்தியே தீரும்! வீழ்த்தியே தீரும்!! ★

மலர் வெண்பா

★

"ஊர்-பேர் வெண்பா"க்கள் ஓராயிரத்துக்குமேல் வந்து சேர்ந்துள்ளன. அவ்வளவும் அழகிய படைப்புக்கள். கிழமை தோறும் வெண்பாப் போட்டியில் கலந்துகொள்வோர் தவிர, புதிய பல தோழர்களும் தாம் அறிந்த, படித்த, கேட்ட செய்திகளை வைத்துத் திறமையுடன் தொகுத்தெழுதி இருக்கின்றனர். அத்துணையையும் வெளியிட்டால் தனி மலரே வெளியிடலாம். ஆனால் அவற்றுள் சிலவற்றை மட்டுமே மலரில் வெளியிடக்கூடிய நிலையில் உள்ளோம் மலரில் அவை தனியிடம் பெறுகின்றன. இம்மாதம் 22-ம் தேதியோடு போட்டி இறுதிநாள் முடிந்தும் இன்னும் பல வெண்பாக்கள் வந்துகொண்டேயுள்ளன. தோழர்கள் இனி அனுப்பாதிருக்கக் கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் தோழர்களின் ஆர்வத்திற்குப் பாராட்டும் நன்றியும் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்.

வெண்பாப் போட்டி–34.

தனிச்சீர் :

விற்கொடியோன்.

முடிவு தேதி: 24-1-'59.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

'தென்றல்' நண்பர்களுக்கோர் வேண்டுகோள்

நண்பர்களே,

கடந்த இரு வாரங்களாக எனது வளர்ப்புத் தாயாரவர்கள் காரைக்குடியில் மரணப்படுக்கையில் கிடந்து வருகிறார்கள். அதனால், 'தென்றல்' தொடர் கதையான 'ஊமையன் கோட்டை', 'நான் தெய்வத்தை நம்புகிறேன்' முதலியவற்றை எழுத இயலாமற் போய்விட்டது. மன்னிப்பு வேண்டுகிறேன். இந்த இதழில் எழுத எண்ணியும் மன அமைதி இல்லை. அடுத்த இதழில் இரண்டும் நிச்சயம் வரும். பொறுத்தருள்வது நண்பர்கள் கடன். 'தென்றல்' எப்போதும் தங்கள் ஆதரவை ஒரே சீராக வேண்டுகிறது.

அன்பன்,

5. அண்ணாமலை செட்டி தெரு
முத்துப்பட்டணம்
காரைக்குடி,

கண்ணதாசன்.

வருந்துகிறோம்

ஆசிரியர் கண்ணதாசன் அவர்களின் வளர்ப்புத்தாயார் அவர்கள், தொடர்ந்த உடல் நோயினால் துன்புற்று 25-12-58வயன்று காலை இயற்கையடைந்து விட்டார்கள் என்ற செய்தி கேட்டு ஆறாத் துயருறுகிறோம். காரைக்குடியில் இருக்கும் கவிஞர் அவர்களுக்கும், சுற்றத்தார்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தென்றல் அலுவலகத்தார்.

பலி பீடத்திலே பாஸ்டர் நாக்!

உலகத்தின் பலபகுதி மக்களின் இதயத்தைக் கவர்ந்திருப்பவர் ரஷ்ய எழுத்தாளர்போரிஸ் பாஸ்டர் நாக்! பலி பீடத்திலே நிறுத்தப்பட்டிருக்கும் இவர் அண்மையில் நோபல் இலக்கியப் பரிசு அளிக்கப்பட்ட அறிஞர். அவர் எழுதிய கருததோவியங்களுக்காக அளிக்கப் பெற்ற பரிசை பறித்துக் கொண்டு விட்டார்கள் மாஸ்கோவிலுள்ள பெரிய மனிதர்கள்! உலகை மிரட்டும் ஆற்றல் படைத்த ரஷ்யர்களிலே, அவர் தம் தலைவர்களிடத்திலே, நேர்மையும் நல் உள்ளப் பண்பாடும் நாளுக்குநாள் தேய்ந்துகொண்டு வருகின்றன என்பதற்கோர் எடுத்துக் காட்டாக அமைந்தது இம்ரேநாகி கொலை! இந்தியக் கம்யூனிஸ்டுகளின் பாராட்டுக்கும் பணிவன்பிற்கும் உரிய குருஷ்சேவும் அவரது கூட்டாளிகளும் பாஸ்டர் நாக் பழிவாங்கப்பட்ட நிகழ்ச்சியினுல் தங்களின் அதிகார வெறியைக் காட்டிவிட்டார்கள். 'பாஸ்டர் நாக்' பற்றிய படப் பிடிப்பை, "தென்றல்" நமக்கெல்லாம் தெளிவாகக் காட்டியிருக்கிறது! இந்தியக் கம்யூனிஸ்டுகள் இந்தப் பழிகாரச் செயலுக்குப் போட்டுவிட முயன்றிருக்கும் பட்டுத்திரையை விலக்கிவிட வேண்டியது என்னுடைய கடமையாகிறது. "மாஸ்கோவில் மழை பெய்தால் மதராசில் குடைபிடிப்பவர்கள்" என்ற அழகு மொழியை மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளார்! ருஷியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது மாநாடு நடைபெற்று முடிந்த சில நாட்களிலேயே இந்தியக்கம்யூனிஸ்டுகள் இனிமேல் தாங்கள் "கண்ணை மூடிக் கொண்டு குருஷ்சேவ் போன்ருரைப் பின்பற்றப் போவதில்லை-மாஸ்கோவின் கட்டளைகளை எதிர் பார்ப்பதில்லை; சுய சிந்தனையுடன் எந்தப் பிரச்னையையும் அணுகித்தான் தீர்வு காண்போம்" என்றெல்லாம் மத்தியக் கமிட்டி வாயிலாக விளம்பரப் படுத்தினுர்கள். ஆனுல் அவர்களுக்கு கிடைத்த பல வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொள்ளவில்லை. ரஷ்யா-அங்கேரியில் ரணகளம் உண்டாக்கியது. இவர்கள் கைதட்டி வரவேற்ருர்கள்! ஸ்டாலின்-கேவலப்படுத்தப்பட்டார் அதனையும் அகமகிழ்வுடன் பாராட்டினுர்கள்! இம்ரே நாகி கொல்லப்பட்டார். இதைப் போன்றதோர் அருஞ் செயல் உண்டா என்று கேட்டார்கள்! புல்கானின் விரட்டியடிக்கப்பட்டார். மிகச் சரியென்று தலையாட்டினுர்கள்!

இப்போது கம்யூனிஸ்டுகளின் சுயமான செயலுக்கு ஒரு சவாலாக அமைந்து விட்டது பாஸ்டர் நாக் செய்தி! இதிலும் வழக்கம் போல் இவர்கள் மாஸ்கோ பக்கம் சாய்ந்து விட்டார்கள்! பரிசு பெற்ற எழுத்தாளர் பழிவாங்கப்பட்டார். இதனைப் பாரெங்குமுள்ள பலரும் பரிதாபத்துக்குரிய செய்தி யென்று சொல்லி அனுதாபப்படுகிருர்கள் - ஆனுல் இந்தியக் கம்யூனிஸ்டுகள் நேர் எதிர் கோட்டிலே நடை போடுகிருர்கள்! "நோபல் பரிசிலும் கெடுபிடி யுத்தம்", "வேதனையிலும் வர்க்க பாசம்", "பாஸ்டர் நாக்கிற்கு கிடைத்த பரிசு இலக்கியத்திற்கல்ல; கம்யூனிச எதிர்ப்பிற்கே", "சோவியத் நாட்டிற்குப் பெரும் களங்கம்"—இவை 'சென்னை பிராவ்தா'விலேவெளிவந்த சில தலைப்புகள்! தமிழ் நாட்டுக் காம்ரேடுகள் எவருடைய காலடியிலே வீழ்ந்து கிடக்கிருர்கள் என்பதற்கு வேறு சான்றுதேவையில்லை! "'டாக்டர் ஷிவாகோ'" என்ற நாவல்சோவியத் யூனியனில பிரசுரிக்கப்படவேயில்லை. புரட்சிக்கு முன்புள்ள இருபதாண்டு சரித்திரமும், புரட்சிககுப் பின் சுமார் பத்து ஆண்டு சரித்திரமும் பின்னணியாகக் கொண்டது - இந்த நாவல்." ஜனசக்தியின் சிண்டன் இப்படிச் சொல்கிருர்: "ரஷ்ய மக்களின் வீர வரலாற்றைக் கேவலப்படுத்தும், அவர்களது சாதனைகளைக் கேலி செய்யும் சர்வமோசமான நூல் இது. எனவே ஒரு முகமாகப் பத்திரிகைகள் கண்டித்தன"—விளககியிருப்பர் ராமலிங்கம்! இந்த இரண்டு கம்யூனிஸ்டுகளும் ஏன் ஒருவருக்கொருவர் முட்டிக் கொள்கிருர்கள் இந்த ஒரு விசயத்தில்! "திராவிட நாடு" இதழில் வெளிவந்த கட்டுரையை அரங்கண்ணல் எழுதியிருந்தார். சிண்டன், "அண்ணு அவதூறு பொழிகிருர்" என்று அறிவித்திருக்கிருர்!

பாஸ்டர் நாக் விசயத்தில் பார்வைக் கோளாறு கொண்டிருப்பவர்கள், மாஸ்கோ மூலவர்களின் விழிகாட்டும் வழி சென்று கொண்டிருப்பவர்கள், இரும்புத் திரையை அசைக்க முடியுமா என்று அறைகூவல் விடுப்பது சரியா? ஒரு எழுத்தாளன் தனக்குப் பரிசு கிடைப்பதை, பிறப்புரிமை என்ருல் அவர்கள் மறுக்கத் தயாராக இல்லை-இருந்தாலும் பாஸ்டருக்குப் பரிசு கூடாதாம்! ஜெர்மன் நாட்டு மார்க்ஸ் இங்கிலாநதிலே தங்கி 'மூலதனம்' எழுதித் தந்தார். ரஷ்ய நாட்டு எஜமானர்களும் அவர்களுடைய இந்திய ஏஜண்டுகளும் அதனை ஏற்றுக் கொண்டார்கள்! ஆனுல் பாஸ்டர் நாக் புத்தகம் ரஷியாவில் வெளியிடப்படாமல் இத்தாலியில் அச்சிட்டுவெளியிடப்பட்டது அடாத செய்கையாம; அதற்குப் பரிசளிப்பது கூடாதாம்! இதனை ஏகாதிபத்தியங்களின் சதி என்ருர்கள்; பொல்லாங்கு என்றும் கூறினுர்கள்!

இந்தியக் கம்யூனிஸ்டுகள் வழககம்போல் மாஸ்கோவின் தீர்ப்பே நல்ல தீர்ப்பு என்று சொல்லிக் கொள்பவர்கள் பாஸ்டர் நாக் நோபல் பரிசு பெற்றுக் கொள்வதனுல் இன்றைய சோவியத்ரஷ்யாவுக்குஏற்படப்போகும் சாதக பாதகங்களை இதுவரையில் சொல்லவில்லை! கண்டம்விட்டுக் கண்டம் செல்லும் ஆயுதங்களை வைத்திருப்பதாகத் தமிழ் நாட்டுக்கம்யூனிஸ்டுகளால் அடிக்கடி பாராட்டப்படுகின்ற மாஸ்கோ, ஒரு எழுத்தாளரின் புதுவாழ்வைப் பொசுககி விட்டுத்தான் உயிர் வாழும் நிலையில் இருக்கிறதா? "சோவியத் யூனியனை எதிர்த்துமுதலாளித்துவநாடுகள் நடத்தும் கெடுபிடிப் போரின் ஒரு அம்சம் இது" என்று எழுதுகிருர் ஜனசக்தி தலையங்கத்தார். லெனின் கிராடும் ஸ்டாலின் கிராடும் உடைத் தெறியப்பட்டு விட்டதாகக் கற்பனை செய்து கொள்கிருர்! மாஸ்கோவில் மறுமலர்ச்சி வாழ்வென்று சொல்லியோர், பாஸ்டர் நாக் அந்த மாஸ்கோ பாதையின் ஸ்டாலின் கால நிகழ்ச்சிகளைச் சொல்லியது தவறென்று தண்டிக்கமுனைவது சரியா? ஸ்டாலின் செய்த தீச் செயல்களை, குருஷ்சேவும் புல்கானினும் சொல்லவில்லையா? காதுக்கு மெஷின் வைத்திருக்கும் கம்யூனிஸ்டுகள் கூடக் கேட்டு ரசிக்கவில்லையா? அதே செய்திகளை பாஸ்டர் நாக் மட்டும் ஏன் சொல்லக்கூடாது? குருஷ்சேவ் சொல்லும்போது அவை மறைந்து கிடந்த உண்மைகள். ஆனுல், பாஸ்டர் சொல்லும்போது அவை எப்படி அவதூறுகளாகும்? இன்றைக்கு குருஷ்சேவ் கும்பல் டிட்டோவை திரிபு வாதக்காரர் என்று திட்டுவதைக் கம்யூனிஸ்டுகள் ஏற்றுக் கொள்வது போலத்தான் அன்றைக்கு ஸ்டாலின் டிராட்ஸ்கியைத் துரோகி யென்று தூற்றிக் கொன்று விட்டபோதும துதி பாடினுர்கள், 'துரோகி ஒழிந்தான்' என்று! இதையும் பாஸ்டர் நாக் சொல்லியிருந்தால் தவறுண்டா? இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூளையெனத தகும் பி. ஸி. ஜோஷி, பெயரளவில் செயலாளராக இருந்து புதுடில்லி-திருவனந்தபுரம் கம்யூனிஸ்ட் கட்சியின் தபால்காரராக மாறியிருக்கும் அஜய்கோஷ், விஞடிககு விஞடி வேகத்தை அதிகப்படுத்தி நிமிடத்திற்கு நூறு வார்த்தை பேசுகின்றடாங்கே, இவர்கள் எல்லாம் டிராட்ஸ்கியைப்பற்றி ஸ்டாலின் சொன்னது வேதவாக்கு என்று பாராட்டியவர்கள் தானே? இப்போதும் அதே குற்றச் சாட்டுகளும் நிகழ்ச்சிகளும் நாவலாகத் தரப்படும்போது கெடுபிடிப் போர் என்று கொக்கரிப்பது ஏன்?

மாஸ்கோவில் ஸ்டாலின் சிலைகள் உடைக்கப்பட்டன. இங்கேயுள்ள கம்யூனிஸ்ட்கள் கண்டிகக முடிந்ததா? அதைத் தானே பாஸ்டர் நாக் சித்தரித்துக் காட்டினுர்! அன்றையதினம் குருஷ்சேவின் கண் ஜாடைக்கும் கட்டளைக்கும் ஒலி பெருக்கிகளாக இருந்து கூவியவர்கள் ஊமைகளாகியது எப்போது? பாஸ்டரே

...அறிவுக்கதிர்களை அளிப்போர் அரிவாளால் அறுக்கப்பட்டுச் சுத்தியலால் நொறுக்கப்படுவது அன்றாட நடவடிக்கையாகிவிட்டது இரஷ்யாவில்...

பரிசு வேண்டாம் என்று இலக்கியக் கழகத்திற்குத் தெரிவித்துவிட்டார்; மாஸ்கோவின் தடையேதுமில்லையென்று சமாதானம் கூறுகின்ற கம்யூனிஸ்டுகளும் இருக்கிருர்கள். இதனை நம்புவதற்கு நம்மைக் கட்டாயப்படுத்துகிருர்கள் என்ருல் அவர்கள் எழுத்துரிமையைப் பாராட்டும் அவலட்சணத்தையும் அறிமுகப்படுத்துகிறுர்கள் என்றே பொருளாகும்! மாஸ்கோவின் இரும்புக் கரங்கள் பாஸ்டரின் கழுத்தை நெறிக்கத் தயாரான பின்புதான் அவர் பரிசை ஏற்றுக் கொள்ள இயலவில்லை என்று சொன்ஞர்! **அவருடைய படம் ஒன்றை 'தென்றல்' வெளியிட்டிருந்தது- நெஞ்சிலே கை வைத்து பாஸ்டர் நிற்கும் பரிதாபத்துக்குரிய காட்சி, "என்னை வஞ்சித்துவிட்டீர்களே! என் இதயத்திலே அடித்துவிட்டீர்களே!" என்று மாஸ்கோ தெய்வங்களைப் பார்த்துக் கேட்பது போலத்தான் தோன்றுகிறது!** நேரு கூட இந்தக் கொடுஞ் செயலைக் கண்டித்து விட்டார். மாஸ்கோ நண்பர்கள் உடனே அவர் மீதும் தங்கள் பார்வையை வீசிப் பேசுகிருர்கள். ஆனால் இந்த நெஞ்சுத் துணிவு கோவிந்த நாயரும் கிருஷ்ணய்யரும் டாங்கேயும் இம்ரே நாகி கொலையைக் கண்டித்த போது இதயத்துக்குள்ளேயே அடைபட்டுவிட்டது! "அண்ணுத்துரை ரெம்பக் குள்ளம்; சுத்தக் கருப்பு" என்றெல்லாம் கற்பனைக் கட்டுரை தீட்டுகின்ற 'ஜன சக்தி' பெரிய உருவம், மாஸ்கோவில் இந்திய எழுத்தாளர் குழுவினர் அவமானப்படுத்தப்பட்டதையும்—கம்யூனிஸ்ட் ஆதரவாளராக சிபார்சு செய்து சமாதானப் பரிசு பெற்றுக்கொண்ட தோழர் முல்க்ராஜ் அனந்தன் வெளியிட்ட அறிக்கையையும் பற்றி எதுவும் பேசுவதில்லையே ஏன்? அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆரும் தேதி முடிய 'டாஷ்கண்ட்' நகரத்து இலக்கிய எழுத்தாளர் மாநாட்டில் பண்டிதரின் பஞ்சசீலக் கோட்பாடுகள் பரிகசிக்கப்பட்டனவாம். இந்தியப் பிரதிநிதிகள் பதில் கூற அனுமதிக்கப்படவில்லையாம்—பாஸ்டர் நாக் மீது பழி சுமத்துவோர் இந்திய எழுத்தாளர்கள் திரும்பிவந்த சோகச் செய்திக்கு என்ன சொல்கிருர்கள்?

தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகள் தாங்கள் மாஸ்கோவுக்குத் தலைவணங்கும் ஒவ்வொரு சமயத்திலும் ஏதாவதொரு காரணம் சொல்வது போலவே 'பாஸ்டர் நாக்' விசயத்திற்கும், மிஸ். மேயோ இந்தியாவைப் பற்றி எழுதியதையும், ஹரீந்திரநாத் மலாய் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டதையும் சான்றுகளாக் காட்டியுள்ளார்கள். இந்திய உபகண்டத்து மக்கள் லண்டனுக்கு அடிமைகளாகப் பேரம் பேசிக்கொண்டிருந்த காலத்தில் மேயோ சொன்ன கூற்றுக்கள் கண்டிக்கப்பட்டன. ஆளும் இனத்தவரின் ஆணவப் போக்கின் அறிகுறியாகவும் மிஸ். மேயோவின் சொற்கள் தென்பட்டிருக்கலாம்! ஆனல் பாஸ்டர் நாக் தந்துள்ள செய்திகள் ருஷ்யாவின் வரலாற்றிலேயுள்ள செய்திகளே தவிர, கற்பனைக்கு இடமில்லையே! "ஜெர்மன் நாட்டின் நலன் என் குறிக்கோள்" என்று சொன்ன இட்லருக்கு மாஸ்கோவும் அதன் தாசர்களும் தந்துவிட்ட பட்டங்கள் போர் விரும்பி-பேராசைக்காரன்-வெறியன் என்பனதான். ஜார் மன்னன் தன் அண்ணனைக் கொன்று விட்டான் என்ற செய்தி கேட்டவுடனே மாவீரன் லெனின் பொங்கி யெழுந்தான்-மன்னனைத் தொலைப்பேன் என்று சூளுரைத்துப் புறப்பட்டான். இந்த உண்மையை எடுத்துக் காட்டினல் மாஸ்கோ மக்களை இழிவுபடுத்தியது ஆகுமா? மலாய் நாட்டிலே யிருக்கிற பிரிட்டிஷ்காரர்கள் அரீந்திர நாத்தை வெளியேறும்படிக் கேட்டுக் கொண்டார்கள்-பயந்தே சொன்ஞர்கள். அவரின் கதைகள் புயலைக் கிளப்பக் கூடும் என்ற அச்சமும் கலந்திருக்கலாம்! குருஷ்சேவ், தனக்குநிகர் தானே என நிமிர்ந்து நின்று புல்கானின் மாலங்கோவ் துரோகப் பட்டியல்களைக் காட்டிக் கொண்டிருப்பவர், சாதாரண பாஸ்டரைக் கண்டு பயந்து விட்டாரா? நம்பத் தயாரா கம்யூனிஸ்டுகள்? (ஹோம்லண்ட் 7—12—58) நாஜிகள் சர்க்கார் 1936-ல் உஸ்டைஸ்கி என்ற வைத்திய நிபுணருக்குக் கிடைத்த நோபல் பரிசையும் அவருக்குக் கொடுக்கக் கூடாதென்று தடை செய்தார்களாம்-தபால் மூலமாக அவர் பெற்றுக் கொண்ட சேதி கேட்டபோது 'கோயரிங்' அவரைச் சந்தித்து பரிசைத் திருப்பி அனுப்ப வேண்டுமென்று கட்டாயப்படுத்தினராம்! பாஸ்டர் நாக் செய்திக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகவும் இணைப்புக் கோடாகவும் இருக்கும் இந்த நிகழ்ச்சி மாஸ்கோ அதிகார வர்க்கத்தவரும் நாஜிகளைப் போலவேதான் இருக்கிருர்கள் என்பதை நினைவுபடுத்துகின்றன. பாஸ்டருக்குப் பின் பலிபீடத்தில் இரையாகப் போவது யாரோ?

—கூடலரசன்

அழகிய பதிப்பு! குறைந்த விலை!

பொங்கல் நாளில் எங்கும் கிடைக்கும்!

கண்ணதாசன் கவிதைகள்

★ அற்புதமான படைப்புக்கள்; புதிய தலைமுறைக்கோர் விடிவெள்ளி!

★ குருதி நாளங்களில் துணிவேற்றி, மனிதனை மனிதனுக வாழவைக்கும் எண்ண வடிவங்கள்!

★ திராவிட சமுதாயத்திற்கொரு கைவிளக்கு!

★ பெரும்புலவர்கள் முன்னுரை தனிச்சிறப்பு!

★ கவிஞரின் முதற்கவிதையிலிருந்து இன்றுவரை எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான கவிதைகள்!

★ இதில் மூன்றுக்கு மேற்பட்ட காவியங்கள், இசைப் பாடல்கள், பழம்பாடல் விளக்கக் கவிதைகள் சேர்ந்துள்ளன.

விரைவில் இக்கவிதைகளின் வெளியீட்டு விழா மிகப் பெரிய அளவில் அறிஞர் அண்ணு அவர்கள் தலைமையில் சென்னையில்—திறந்தவெளி அரங்கில்—நடைபெற இருக்கிறது.

நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணநிதி, பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் மற்றும் தமிழ்ப்பெரும் புலவர்கள் பலரும் கலந்துகொள்கின்றனர்.

400-க்கு மேல் பக்கங்கள்: விலை ரூ. 2-50.

விற்பனையாளர்களுக்கு 20% கழிவு. வேண்டிய பிரதிகளுக்கு உரிய தொகையை முன்கூட்டியே எம். ஒ. மூலம் அனுப்ப வேண்டும்.

தனிப் பிரதி வேண்டுவோர் ரூ. 3-00 எம். ஒ.வில் அனுப்ப வேண்டும்.

எழுதுக:—

"காவியக் கழகம்"

43, கலவச் செட்டித் தெரு,

சிந்தாதிரிப்பேட்டை,

சென்னை-2.

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

சொல்லமுடியாத சரண்டலாக அமையவேண்டும் என்று கருதுபவர்கள். மொத்தத்தில் அதை எடுத்து, அலசி ஆராய்ந்து பார்த்தால் அந்தச் சுரண்டல் தன்மை நிச்சயமாக வெளுப்புத்துணியில் பட்ட கருப்புச்சாயத்தைப்போல விளக்கமாகத் தெரிந்துவிடத்தான் செய்யும்! என்றாலும் இது அவர்கள் வந்த வழி! அந்த வழிக்குக் கௌரவமாக மனித சமுதாயம் இட்டிருக்கும் பெயர் 'இராஜதந்திரம்!'

இந்த இராஜதந்திர முறையில் செயல்படுகிற அவர்கள், கம்பெனியார் செய்கிற தவறுகளை - அதாவது தவறு என்று ஆங்கிலேயரல்லாத பிறருக்கு அது தெளிவாகத் தெரிந்துவிட்டால் மட்டுமே - உடனேயே கண்டிப்பார்கள். பிறர் கண்ணில் மண்ணைத் தூவுவதற்காக உடனே ஒரு விசாரணைக் குழுவைக் கூட்டுவார்கள். ஒரு தண்டனையையும் தந்து வைப்பார்கள். என்றாலும் உண்மையில் அவர்கள், கம்பெனியாரை முழுக்க முழுக்க ஆதரிப்பவர்களே. அவர்களுடைய மொத்த இலட்சிய

— ப. புகழேந்தி —

மெல்லாம் யாரையாவது எதையாவது செய்து எப்படியும் இங்கிலாந்துக்கு இலாபம் கொண்டு வந்தால் போதும் என்பதுதான். திருடனை தன் மகன் அதற்கு முன்னால் திருடிக்கொண்டுவந்த பொருட்களையெல்லாம் வாங்கி வைத்துக்கொண்டு, ஒரு திருட்டில் அவன் பிடிபட்டுவிட்டால் 'அவன் தன் மகனல்ல; அவனுக்கும் எனக்கும் 'சம்பந்தமில்லை' என்று கூறும் புத்திசாலித் தகப்பனைப்போலவே, கிழக்கிந்தியக் கம்பெனி விஷயத்தில் இங்கிலாந்து நடந்துவந்திருக்கிறது.

இந்த நிலைமையைத் தெளிவாக அறிந்துகொண்டால், கிழக்கிந்தியக் கம்பெனியின் நடவடிக்கைகளில் ஆங்கிலப் பாராளுமன்றம் அதிகாரப் பூர்வமாக 1774-ல் தான் முதன் முதலில் தலையிடத் தொடங்கியதாகக் காட்டிக்கொண்டது என்றாலும், கம்பெனி உண்மையிலேயே இங்கிலாந்துக்காகவே — இங்கிலாந்தின் அரசுக்காகவே - இங்கிலாந்தின் இலாபத்துக்கும், பெருமைக்குமாகவே இங்கே இயங்கி வந்தது என்பது விளங்கும் எனவே, இந்தியத் துணைக்கண்டத்தில் கம்பெனியாரின் முதல் கால்கோள் விழா என்பதிலேயே, இங்கிலாந்து அரசின்—அதாவது இந்தியாவின் பின்னாள் எஜமானர்களின் நிழல் படிந்துவிட்டது என்பது சர்வ நிச்சயம். ஆகவே பின்னாளில் கட்டபொம்மன் முதலியவர்கள் நடத்திய போர் விடுதலைப் போரே என்று கொள்ளப்பட்டால்—அந்தக் கம்பெனியை எந்தவிதத்தில் எதிர்த்தாலும்—ஓரளவு அதுவும் விடுதலைப் போரே. அதாவது பிறரின் எந்தத் தலையீட்டையும் ஏதாவது காரணங் கொண்டு எதிர்க்கும் சுதந்திரக் கிளர்ச்சியே என்று நாம் ஏன் கொள்ளக்கூடாது என்றே படுகிறது.

முதலில் வியாபாரத்துக்கு வந்த கம்பெனியார், பின்னாளில் மெள்ள மெள்ள ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றும் வேலையில் ஈடுபட்டனர். அதற்காக அவர்கள் உறவாட வேண்டாதவர்களிடம் உறவாடினர்; சண்டையிட வேண்டாதவர்களிடம் சண்டையிட்டனர். முன்னரே புத்திசாலிகளான அவர்கள், இங்குள்ள குழப்ப நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டதில் ஆச்சரியமில்லை. வரிசையான அவர்களின் வெற்றிப் பாதையில் ஒரு மைல் கல்லே, அப்போது தென் சீமைகளின் பட்டயக்காரனை ஆர்க்காட்டு நவாபு அவர்களிடம் கடன் பெற்றிருந்ததாகும். கடன் தர வேண்டிய நவாபு, வக்கில்லாத காரணத்தால் வரி வசூல் செய்யும் உரிமையை, கம்பெனியாருக்கு அளித்தான். அதாவது அப்படி அளித்ததின் வாயிலாக, தமிழகத்தின் ஆட்சி உரிமையையே ஆங்கிலேயர்க்கு அளித்துவிட்டான் ஆர்க்காட்டு நவாபு.

அத்தகைய ஆர்க்காட்டு நவாபுவை எதிர்த்துப் போர் புரிந்தவனே புலித்தேவன்.

ஆர்க்காட்டு நவாபுவுக்கு சாதாரண ஒரு மன்னனுக்குச் செய்யும் உதவி முறையில் ஆங்கிலேயர் உதவவில்லை. அந்தபூமிக்குத் தாங்களே அதிகாரிகள் என்ற முறையிலேயே அவர்கள் படை கொடுத்தார்கள்; பட்டாளத் தளபதிகளை அளித்தார்கள். தங்கள் நாட்டவர்களான நல்ல வீரர்களையும் போரில் காவு கொடுத்தார்கள்.

ஆங்கிலேயர்களையும், ஆர்க்காட்டு நவாபுவிடம் அவர்கள் கொண்டிருந்த தொடர்பையும், அதன் மூலம் அவர்கள் ஏற்படுத்திகொண்ட வாய்ப்புகளையும், வசதிகளையும் முறையாக உட்கார்ந்து கணக்குப் போடும் எவரும், அந்த நேரத்தில் படை உதவிய ஆங்கிலேயரின் உள் எண்ணத்தை உணராமலிருக்க முடியாது.

ஆற்காட்டு நவாபுவுக்காகத் தாங்கள் நடத்தும் அந்தப் போர், உண்மையில் தங்கள் வாழ்வுக்காக-தங்கள் எதிர்காலத்துக்காக-தங்கள் அரசு இங்கே உருவாவதற்காக நடைபெறும் போரே என்பதை உணர்ந்துதான் அவர்கள் செயல்பட்டார்கள். எனவே, ஆர்க்காட்டு நவாபின் போர்வையில் அவர்கள் புலித்தேவன்மீது படை திரட்டினார்கள் என்றே நாம் குறிப்பிட வேண்டும். உண்மையில் அந்தப் போர்களில் ஆங்கிலப் படை தொடர்ந்து தோல்வியுற்று, புலித்தேவனின் கை பல காலம் உயர்ந்தே நின்றிருந்தால், பின்னாளில் வீரபாண்டியக் கட்டபொம்மன் வெள்ளைக்காரர்களை எதிர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்குமா என்பதே சந்தேகம். ஆக,—வெள்ளையரை எதிர்ப்பதெல்லாம் விடுதலைப் போர் என்றால்—ஆங்கிலக் கம்பெனியாரை எதிர்த்து எவ்வகையிலும், நடத்தும் எப்போரும்—விடுதலைப் போரே என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும்! உண்மையில் இந்தப் போர்களைத் தொடர்ந்து தமிழகம் ஆங்கிலேயரின் கைக்குள் அடங்கிவிட்டது என்ற சரித்திர உண்மையைப் புரிந்துகொண்டவர்கள் இதற்கு எதிராக இருக்க மாட்டார்கள்.

ஆனால், உயர்திருவாளர் ம. பொ. சி. யோ, '1755 முதல் 1760 வரை புலித்தேவன் நடத்திய போர் ஆங்கிலப் பேரரசுக்கு எதிரானதல்ல, ஆர்க்காட்டு நவாபுவுக்கு எதிராகவே நடந்தது' என்கிறார்.

மேலும் அதனை விளக்கி அவர் தனது '**செங்கோல்**' (5–10'58) இதழில் எழுதுகிறார்.

'பொல்லாப் பாண்டிய கட்டபொம்மு – புலித்தேவர் காலத்தில் நடைபெற்ற பாளையக்காரர் போருக்கும், வீரபாண்டியக் கட்டபொம்மன் - ஊமைத்துரை காலத்தில் நடைபெற்ற பாளையக்காரர் போருக்கும் அடிப்படையில் வித்தியாசமுண்டு. முன்னது, ஆர்க்காட்டு நவாபின் அதிகாரத்துக்கு எதிராக நடந்தது; பின்னது, ஆங்கிலப் பேரரசின் ஆதிக்கத்தை எதிர்த்து நடந்தது. இவற்றில் இரண்டாவதாகச் சொன்ன போரிலிருந்துதான் ஆங்கிலப் பேரரசுக்கு எதிராக மக்கள் நடத்திய விடுதலைக் கிளர்ச்சி தொடங்குகின்றது என்ற உண்மையை வரலாறு வலியுறுத்தி நிற்கின்றது.'

திரு. ம. பொ. சி. அவர்களின் இந்தக் கூற்று, உண்மையில் 'தும்பைவிட்டு வாலைப் பிடித்த கதை'போலத்தான் இருக்கிறது. நவாபுவின் பெயரால் ஆங்கிலேயர் அடைந்த வளர்ச்சியும், நவாபுவுக்குப் பின்னால் இந்த மண்டலமே ஆங்கிலரின் அடி பணிந்துவிட்டதும் நன்றாகத் தெரிந்த எவரும், அதன் அடிப்படையில் நடைபெற்ற விஷயங்களைச் சிந்தித்துப் பார்த்த எவரும் அவரது கருத்தை ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

- தொடரும் -

சந்தாதார்கள் கவனிக்கவும்

இந்த ஆண்டு "தென்றல்" பொங்கல் மலர் சிறப்பாக வெளிவர இருக்கிறது.

மலர் பெற விரும்பும் சந்தாதார்கள் ரூ 2-4-0 தனியாக அனுப்பி பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

மலருக்குப் பணம் அனுப்பும் பொழுது உங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட மறவாதீர்கள்.

நிர்வாகி,
"**தென்றல்**"

விற்பனையாளர்களுக்கு

"தென்றல் பொங்கல் மலர்" தேவையான பிரதிகளுக்கு கமிஷன் அணா 8 நீக்கி பிரதி ஒன்றுக்கு ரூ. 1-8-0 வீதம் பூராத் தொகையும் முன் பணமாக 30-12-58-க்குள் அனுப்பி வைக்க வேண்டும். முன்பணமின்றி கண்டிப்பாக மலர் அனுப்பி வைக்கப்படமாட்டாது. குறைந்த பிரதிகளே தயார் செய்கிறோம். தேவைக்குமுன் கூட்டியே தெரிவிக்கவும். மணியார்டர் கூப்பனில் "பொங்கல் மலருக்காக" என்று குறிப்பிட்டு எழுதுங்கள். தென்றல் பட்டியல் தொகையையும் மலருக்கான தொகையையும் சேர்த்து அனுப்பக்கூடாது.

நிர்வாகி,
"**தென்றல்**"

தேனருவி வெளியீடு!

மலிவான விலையில் எங்கும் விற்பனையாகிறது.

புலியூர்க்கேசிகன் தயாரிப்பு

தமிழ்வீரன் புலித்தேவன்

— வரலாறு —

துர்க்காதாஸ் எஸ். கே. சுவாமி எழுதியது

நல்ல வெள்ளைத்தாள் 180 பக்கங்கள்

மலிவான விலை ரூ. 1-00

வெளியூரில் ரூ. 1.10 தபால் மூலம் ரூ. 1.75

●

அடுத்து வருகிறது

பூலித்தேவனா? புலித்தேவனா?

கட்டபொம்மன் புலித்தேவன் தகராறு பற்றிய பல புதிய செய்திகளும், புலித்தேவன் பெயர் வந்த வரலாறும் பிறவும்.

ஐம்பது காசுகள்

●

விற்பனை உரிமை:

அருணா பப்ளிகேஷன்ஸ்

தியாகராயநகரம் :: சென்னை - 17.

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

தாக்கத் தொடங்கியது. அவன் தன் குதிரையை எதிர்ப்பக்கம் திருப்பித் தட்டிவிட்டான்; தப்பித்தோடினன்; அதுவும் துரத்தியது. கூடவந்திருந்த அவ்வளவு பேரும் அவன் ஓடுவதைக் காட்டிச் சிரித்தவாறே நின்றனர்.

பன்றியை ஏமாற்றிவிட்டு ஓடி வந்த அவன் நடுக்காட்டில் தென்பட்ட அவள் வீட்டினுள் நுழைந்து தப்பினன். அவள் அவனைத் தேற்றிக் காப்பாற்றினள்.

நிலையை அறிந்து வருந்திய அவள் தனக்குள் ஒரு முடிவெடுத்துக்கொண்டாள். வேட்டைத் தொழிலின் பல நுணுக்கங்களையும் போதித்தாள். கூட்டாளிகளுக்கு முன் பழிக்கப்பட்ட கோழை இளவரசன் உடலில் புத்துணர்ச்சி பாய்ந்தது. வாள் சுழற்றல், ஈட்டி எறிதல், அம்பு தொடுத்தல் முதலியவற்றில் அவன் தேர்ந்தான். விலங்குகளின் உறைவிடங்களையும் அவற்றின் போக்கு வரவுகளையும் கற்றுத் தெரிந்தான். ஏதோ ஓர் ஆசை அவனைத் தூண்டியது. அவனுக்கு எல்லாவற்றையும் போதித்தாள். மானம் தலைதூக்கிய அவனும் எல்லாவற்றையும் கற்று அவளது சிறந்த மாணவனுனன்; இப்போது அவனுக்குள்ள திறமை ஏதும் அரசினருக்கோ நாட்டுமக்களுக்கோ தெரியாது. அவன் வீரம் களம் காணுத வாளாகவே இருந்தது. இப்போது...சமயம் வாய்த்துவிட்டது.

அவள் எதையும் கைம்மாருக எதிர்பார்க்கவில்லை. அப்படித்தான் அவள் விரும்புவது கிடைக்குமா? அவன் இளவரசனுயிற்றே! அவளோ கேவலம்.. ...ஒரு காட்டுப்பெண். முல்லையானுலும் காட்டிலே பூத்தால், கடைசிவரை காடுதானே இருப்பிடம்! அவனும் அவளை விரும்பினன் உயிர்த்தோழி என்ற முறையில்.

போட்டித் திடலில் ஆரவாரம் எதிரொலித்து. அரசன் மட்டும் முன்னுள்போலவே கவலையில் மூழ்கிக் கிடந்தான்.

போட்டியாளர்கள் திடலுக்குள் நுழைந்துவிட்டனர். வாழ்த்து ஒலியலைகள் புதிய உற்சாகத்தைத் தந்தன. போட்டிகள் தொடங்கப் போகும் சமயம் காற்றினும் கடுகி ஓடிவரும் குதிரை ஒன்றின் காலடி ஓசை கேட்டது. எல்லாரும் ஒலி வந்த பக்கமே திரும்பினர். வெள்ளைக்குதிரை ஒன்றில் வந்த 'அவன் அரசனின்முன் நின்றான். எல்லோர் விழிகளும் அவனைத் தைத்தன. அரசன் நிமிர்ந்து உட்கார்ந்தான். ஒரு வினுடி கழிந்தது. ஆச்சரியத்துடன் - ஆர்வத்துடன் நிமிர்ந்து அவனைப் பார்த்த அனைவரும் சிரித்துவிட்டனர். கேலியும் கிண்டலும் படை எடுத்தன.

தைத்திருநாளன்று
புத்தக வடிவில் வருகிறது!
எஸ். எஸ். தென்னரசு
எழுதிய
மயிலாடும் பாறை
ஓர் ஆடற்கலையரசியின்
உருக்கமான சரித்திரம்
விலை ரூ. 1
★
விவரங்கட்கு:
இளங்கோ பதிப்பகம்
14, உஸ்மான் ரோடு,
சென்னை-17.

பலர் பலர் ஏதேதோ பேசிக்கொண்டனர். அவனே அவற்றைக் கவனிக்கவில்லை. வசந்தவல்லி இருந்த திக்கைப் பார்த்தான். அங்கே இருந்தது எலும்பும் சதையும் உருவான பெண்ணல்ல; புனையா ஓவியம்–எழுதாக் காவியம்–நுகரப்படாப் பருவமலர்ச் சோலை - ஒளிசிந்தும் முழுமதியல்லவோ அங்கே இருந்தது.

அந்தக் காவியம், பிந்துசாரனைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக் கொண்டது வெறுப்புடன். அவன் அதைக் கணக்கிலெடுத்துக்கொள்ளவில்லை. "கற்பிக்கிறேன், பாடம்!' எனச் சொல்லாமல் சொல்லிக் கொண்டே, அரசனுக்கு மரியாதை செலுத்திவிட்டுத் திடலுக்குள் நுழைந்தான். குதிரையைத் திடலின் கீழ்ப் பகுதிக்குச் செலுத்தினன். அங்கே சீதேவி சிரித்த முகத்துடன் கைகளை ஆட்டி வாழ்த்தினள். அவன் உடலில் புதுப்பலம் உருப்பெற்றது. கைகளை ஆட்டிவிட்டுச் சிரித்த முகத்துடன் குதிரையைத் திருப்பினன். போட்டிகள் தொடங்கின. நேற்று நடந்தவற்றிலும் அவன் தன் பங்கை முடித்தான்.

முதலில் புருவின் கண்ணை, கணைகளால் கொத்தும் போட்டி. முதல் நாள் போலவே இரண்டாம் நாளும் போட்டியிட்டோர் அனைவரின் அம்புகளும் புருவின் உடலைத்தான் தாக்கின; விழியைக் குத்தவில்லை.

பிந்துசாரன் முறை வந்தது. அம்பு காட்டுத்தனமாகப் பறந்தது எல்லோரும் நகைத்தனர். சந்திரகுப்தன் பற்களைக் கடித்துக்கொண்டே 'அவமானம் தாங்கமுடியவில்லை; மக்கள் நகைக்கின்றனர். அவனைக் கொன்று புதைப்பார் எவருமில்லையா?" என்றான். இரண்டாவது அம்பும்–எல்லோருக்கும்—தவறியது. குப்தன், குமுறினன்; சாணக்கியன் வாய்மூடிக் கிடந்தான். மூன்றுவது அம்பு எல்லோரும் தொடுத்தனர். அம்புகள் புருக்களின் உடம்புகளைத் துளைத்தன. ஏமாந்த மக்களிடை எழுந்த ஆரவாரம் திடீரென நின்றது. அதிர்ச்சியுடன் விழித்தனர். கண்ணைக் கசக்கிக்கொண்டு பார்த்தனர். பிந்துசாரனின் அம்பு புருவின் விழியைத் துளைத்து நின்றது. மக்கள் மறுமுறையும் கண்களைத் துடைப்பதற்குள் இரண்டாம் அம்பு பறந்து குறியில் நின்ற முதல் அம்பைத் தூள் தூளாக்கிப் பதிந்தது; அடுத்து ஓர் அம்பும் பறந்து இரண்டாவதம்பைப் பிளந்து நொறுக்கி விட்டு அதே இடத்தில் நின்றது. மக்கள் தம் விழிகளை நம்ப மறுத்தனர்.

சந்திரகுப்தனும் சாணக்கியனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். நம்பமுடியவில்லையே! வசந்தவல்லி தன் கண்ணைக் கசக்கிக் கொண்டாள். கனவிலும் காணமுடியாததாயிருக்கிறதே!

குதிரையிலிருந்தவாறே சண்டையிடும் கட்டம் வந்தது. பிரபவதத்தன் குதிரையை அடக்கமுடியாது மறுநாள் பார்ப்பதாகச் சொல்லிச் சென்றான். பிந்துசாரன் மறுநாள் போரிடும் குழுவில் இருந்தான். ஆனல் அன்று குதிரைச் சவாரியில் முன்னின்றான். அன்று போரிட்டோருள் மூவர் மாண்டனர். ஆறு பேர் படுகாயம் அடைந்தனர். போட்டி முடிந்து வந்து தன்முன் நின்ற மகனைக் கண்டதும் சந்திரகுப்தன் கண்கள் இரு சொட்டு ஆனந்தக் கண்ணீரை வடித்தன. அவனைப் பெற்றதனுல் பெற்ற பயனைப் பெற்றுவிட்டான்.

மூன்றும் நாள். பிந்துசாரனை எண்ணி அலைக் கழிந்ததால் இரவு முழுவதும் தூங்காத பிரபவதத்தன், வசுகுப்தன், பிந்துசாரன் மூவரும் வில் தெறிக்கும் போட்டிக்கு நின்றனர். போட்டிகள் தொடங்கும் நேரத்தில், பிந்துசாரன் தன் குதிரையைக் கீழ்ப் பகுதிக்குச் செலுத்தினன். சீதேவி, சிரித்த முகத்துடன் கையாட்டி வரவேற்ருள். "திறனைக் காட்டுங்கள் இளவரசே!" என்ருள். அந்த மொழிகளை —இன்ப மருந்துகளைச் சுவைத்துக்கொண்டே திரும்பினன், இடத்திற்கு.

இன்று, மூவரும் முதலம்பிலேயே புருவின் கண்களைக் கொத்திவிட்டனர். அரசன் சிறந்தவனைக் கூற இயலாது திகைத்தான்.

"இருவர் இருவராகப் போட்டியிடட்டும்!" என்ருன் சந்திரகுப்தன். அதில் உள்ள அபாயத்தை உணர்ந்த சாணக்கியன் "வேண்டாம். மூவரும் குதிரையைச் செலுத்தியபடியே, குறி நோக்கி எய்யட்டும். அதில் வென்ருேன்தான் வென்ருேன்!" என்ருன்.

மூவரும் முயன்றனர். ஆனல் பிந்துசாரன்தான் தன் குதிரையிலிருந்தவாறே குறியைக் கொத்தினன். தத்தன் அம்பு சற்றே தவறியது. வசுகுப்தன் அம்பு திசை மாறிப் போயிற்று.

வாழ்த்தொலி விண்ணை முட்டியது. மௌரியன் இதயம் பெருமையில் திளைத்தது. சீதேவி தனை மறந்து குதித்தாள்; வாழ்த்தினள்; பாராட்டினள்.

வாள்போர் அடுத்து நடந்தது. இருவர் இருவராகப் போரிட்டு, பிரபவதத்தனும் பிந்துசாரனுமே மிஞ்சினர். விழிகள் அனைத்தும் நின்றன; அசையவில்லை. வசந்தவல்லியின் கையைப் பற்றத் துடிக்கிருன் தத்தன். அவள் ஆணவத்தைக் குலைக்கத் துடிக்கிருன் சாரன். இருவரும் மலைகள். வெற்றி எவனுக்கு?...

எத்துணைதான் முயன்றும் தத்தனின் வாள் நிலைக்கவில்லை. இரண்டு துண்டுகளாய் உடைந்தது. "கருவியற்றவனைக் கொல்லும் கோழையல்ல நான். போ!" என்ருன் பிந்து. தத்தன் தலைகுனிந்தான்.

இறுதிப்போட்டி, பொற்றேர் செலுத்தல். தத்தன் விதிகட்குப் புறம்பாகவும் தேரைச் செலுத்தி வசுகுப்தன், வருணமித்ரன் முதலிய பலரையும் வீழ்த்தினன். ஆனல் பிந்து எல்லாவற்றிற்கும் தப்பித்து, தத்தனை வீழ்த்தினன். "தத்தனுக்கு வெறி பிடித்து விட்டது" என்று மக்கள் எல்லோரும் சொல்லினர். கடைசியாக, பிந்துவை அவன் தேரிலிருந்து வீழ்த்த முனைந்த தத்தன் தானே பலியானுன், தன் தேர்க்காலில் பட்டு.

வெற்றி மேடைக்கு வந்த மகனை ஆரத்தழுவி ஆயிரம் முத்தங்களைச் சொரிந்தான், சந்திரகுப்தன். வசந்தவல்லி-பெண்டிர் மனம் எப்படித்தான் அத்துணை வேகமாக மாறுகிறதோ-சிரித்தாள்.

வசந்தவல்லியை நினைத்துத்தான் பையன் உடலில் இத்துணைப் புத்துணர்ச்சி எழுந்தாக நினைத்தானே

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
20:B, சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை.

என்னவோ—சந்திரகுப்தன் வசந்தவல்லி என்ற பரிசை வழங்கத் துடித்தான்.

அதற்குள் அரசனைக் கேட்டு மேடையேறினன் பிந்து: "விந்தையாயிருக்கலாம், கோழை ஒருவனு இப்படி வாள்வீசினன் என்று. எனக்கு இந்தப் பயிற்சியும் இதயத்துணிவும் இருந்தும் நான் வாளைத் தொடவில்லை தெரியாத பலரும் ஏதேதோ பேசினர்; எள்ளி நகையாடினர் கோழை என்றும்!

கோழை! கோழை! கோழை! அப்பப்பா! எத்துணை எளிதாகச் சொல்லிவிட்டனர். ஆனல் என் தன் மானத்தை–என் தந்தையின் பெரும் புகழைக் காக்கத்தான் இன்று வாளெடுத்தேன். முதிய பருவத்தில் வேதனை குடையும் எந்தையின் மனக் கவலையை மாற்றத்தான் வேலெறிந்தேன். என்ருலும் என்மனம் ஏனே இந்த முரட்டுச்சண்டைகளில்பற்றுக் கொள்ளவில்லை. இனி என்றைக்கும் நான்வாளெடுக்கமாட்டேன்! ஆமாம்! இது உறுதி! ஆயிரம் முறை நீங்கள் கோழை என்ருலும் வாளைத்தொடமாட்டேன்!"

பேசி முடித்ததும் தன் வாளை எடுத்துத் துடையில்வைத்து முறித்து எறிந்தான். ஒரு வினுடி திடீரென்று கூட்டத்தில் அமைதி நிலவியது. எல்லோரும் திறந்த வாய் திறந்தபடி திகைத்து நிற்க அவன் நடந்தான், தந்தையை வணங்கிவிட்டு.

"பாடலிபுத்திரத்தின் இளவரசனே! நில்! போட்டியில் வென்ற நீ பரிசைப் பெற்றுக்கொள்ளாமலே செல்கிருயே!"

அரசன் சொன்னுன். மகன் பதிலுரைத்தான்.

"அந்தப் பரிசின் கொட்டம் அடக்கத்தான் குதித்தேன் போட்டிகளில். கோழை என்று கூறியவளின் இதயத்தைக் கூரியவாளால் கிழிக்கத்தான் நான் வாளெடுத்தேன். ஆசை நிறைவேறியது. சென்றுவருகிறேன்!"

சந்திரகுப்தன் தடுத்து நிறுத்தப் போனுன். சாணக்கியன் அரசனைக் குறிப்பால் அமர்த்தினன். சாணக்கியனின் கழுகுக் கண்கள் அப்போதே கவனித்துவிட்டன, போட்டியின் இடையிடையே பிந்துவுக்கு உற்சாகம் அளித்து ஊக்குவித்த அந்தக் காட்டுப் பூங்கொடியை!

வேண்டாத பரிசுக்காக தன் வீரத்தை நிரூபித்த கோழை, காட்டு வீட்டை நோக்கிச் சென்றான்!

— மா. பாண்டியன்

ஜூபிடரின்
அண்ணு பத்தி
JUPITER PERFUMERS
M.S.T.V. NEETHI MOHAN, MADURAI.
எங்கும் கிடைக்கும்

வெண்பாப் போட்டி

33. தனிச்சீர் : புலிக்கொடியோன்

கலைப்பணிவல் லாரைக் கவிஞர்களைச் சிற்பச்
சிலைப்பணிவல் லாரையெலாம் சேர்த்தோன்—புலிக்கொடியோன்
என்றபுகழ் பாடிடுவாய் இன்றமிழில் வெண்பாவால்
நின்றபுகழ்க் காவிரியே நீ.

—கோம்பைச்சீரான், கோம்பை.

எலிவீர ஈழத்தார் எம்மவரை வீணில்
பலியாக்கி வேடிக்கைப் பார்த்தல்,—புலிக்கொடியோன்
இன்றில்லை என்றன்றோ இன்றிருப்பின் ஈழத்தை
வென்றுவரு மேயவன் வேல்.

—பொன். இலக்குமணதாசன், செவ்வாய்ப்பேட்டை.

பலிக்குணர்ந்து கண்ணகிமுன் பாண்டியனே செத்தான்
சிலைக்குப் பொறுப்பாளன் சேரன்—புலிக்கொடியோன்
ஆவினது கன்றுக்(கு) அருமகனைத் தேரூர்ந்தான்
மூவேந்தர் நீதி முறை.

—சி. காரையா, தஞ்சை.

அலைக்கும் புனற்கங்கை யாற்றுநீர் வேந்தர்
தலைக்குடத்தால் கொள்ளும் தமிழன்—புலிக்கொடியோன்
சோழன் வடவருக்குச் சோறளித்தான் மாற்றலர்கள்
தாழப் படையெடுத்தான் சாற்று.

—பொற்குடி அரையன், செம்மங்குடி.

உலகாண்ட மூவரிலே உண்மைநெறி கொண்டு
குலமகனைத் தேர்க்காலால் கொன்றான்—புலிக்கொடியோன்
வென்றான் வடநாட்டை விற்கொடியோன், கோவலனைக்
கொன்றான்மீ னுற்றகொடிக் கோன்.

—ச. அ. சின்னையன், சம்பை.

ஒலிக்கும் கடலலைகள் ஓச்சுபுகழ் பாட
வலிக்கும்தோள் வெல்ல வடக்கைப்—புலிக்கொடியோன்
ஆண்ட இனமே! அடிமையாய் வாழ்வதினும்
மாண்டு மடிவதே மாண்பு.

—கு. இரமாதேவி, சென்னை-1.

கலிங்கத்தைத் தாக்கிக் கடாரத்தை வென்றே
அழியாத கீர்த்தி அடைந்தான்—புலிக்கொடியோன்
இன்றிந்தக் காங்கிரசார் இன்றமிழர் ஊர்களைத்தான்
பன்முறையும் தோற்றனரே பார்.

—குகன்குருசாமி, கமுதி.

எலிவாழ்க்கை வாழ்பவர்கள் எத்தர்கள்; என்றும்
புலிவாழ்க்கை வாழ்பவரே வாழ்வார்—புலிக்கொடியோன்
கொண்ட கொடியின் குறிக்கோள் விளக்கமுறப்
பண்டே எடுத்துரைத்தான் பா.

—அம்பிகாபதி, விழுப்புரம்.

குலைத்தெங்கு வாழைக் குலையினிதே தொங்கி
நிலைத்தெங்கும் செல்வம் நிறையும்—புலிக்கொடியோன்
சோழவள நன்னாடு சோறுடைத்து; பொன்னிநதி
சாலவளம் தந்திடுவ தால்.

—அ. சுருளியாண்டிப் பாவலர், கோம்பை.

நலிகின்ற தாயினுக்கு நன்மகனைத் தேரில்
பலியிட்டு நீதி பகர்ந்த—புலிக்கொடியோன்
வாழ்ந்த திருநாட்டில் வந்துதித்த மந்திரியின்
ஆழ்ந்த உறக்கம் அகற்று!

—நா. இளங்கீரன், திருவையாறு.

புலியாய் வடக்கர்மேல் போர்தொடுத்து வென்றே
புலித்தமிழர் மானம் புரந்த—புலிக்கொடியோன்
நன்மரபில் வந்திட்ட நற்றமிழா! அன்னவர்க்கே
இன்றுதலை தாழ்த்துவதும் ஏன்?

—மணவை க. தங்கவேலன், திருவையாறு

சலியா உழைப்பாலும் சான்றோரைக் காத்தும்
புலியாகிப் புல்லரை வென்ற—புலிக்கொடியோன்
காலில்தீப் புண்கண்ட காரணத்தால் வந்தகரி
கால்வளத் தான்சிறப்பைக் காண்.

—மா. நக்கீரன், கிழையூர்.

மொழிவளரத் தாய்நாடு முன்னேற மக்கள்
அளவில்லா நன்மை அடையப்—புலிக்கொடியோன்
சந்ததியே நெஞ்சந் தளராமல் முன்னின்றே
என்றும் பணிசெய் இயைந்து.

—கு. பரிமளம், கமுதி.

பொலிவைப் பொழிகின்ற பொன்னியாற் றுக்கு
நலிவினைப் போக்கவே நாட்டில்—புலிக்கொடியோன்
அன்றே கரையெடுத்த ஆற்றல் மிகும்பணிக்கே
என்றுமிணை யுண்டோ இயம்பு.

—முல்லை, தொ. கோட்டாம்பட்டி.

புலியெதிர்த்துப் பூங்கொடியர் போர்செய்த நாட்டார்
வலியிழந்து வாழ்வதுமேன்? வண்ணப்—புலிக்கொடியோன்
வாழ்ந்ததமிழ் மண்ணையின்று வால்பிடிப்போர் ஆளுவதால்
தாழ்ந்ததே வெம்பசியால் தான்.

—சா. கா. சாகுல்அமீது, சித்தையன்கோட்டை.

தென்றல்
1959
பொங்கல் மலர்

கிழவன் சேதுபதி
—காவியம்

கவலையில்லாத
மனிதன்
—நாடகம்

இரண்டும்
கண்ணதாசன்
மலரில் தரும்
வண்ணப் படையல்கள்!



விவரங்களுக்கு,
பொறுப்பாளர், 'தென்றல்'
சென்னை, 6.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு